★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 2உ சனி (17—11—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 3உ ஞாயிறு (18—11—56) [இதழ் 137

பேச்சளவில்தான் 'சோஷலிச மாதிரி சமுதாய' அமைப்பா?

பெங்களூர், நவ. 16—

'மக்களின் பொருளாதார நிலைமையை அனுசரித்து, நாடு முழுமையிலுமுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு ஒரே மாதிரியான சம்பள விகிதம் ஏற்படுத்த வேண்டும்' என்று மைசூர் முதலமைச்சர் வற்புறுத்தியுள்ளார்.

"அரசாங்க ஊழியரிடையே வருமானத்தில் ஏற்றத் தாழ்வு நிலவினல், 'சோஷலிச மாதிரி சமுதாய அமைப்பு' இலட்சியம் வெறும் பேச்சு அளவோடுதான் இருக்க முடியும்" என்றும் அவர் எச்சரித்தார்.

வெள்ளைக்கார தாசர் என ஏசுவோருக்கு நெடுஞ்செழியன் சாட்டையடி

'காங்கிரஸ்' என்று பெயரிட்டவன் வெள்ளையன்!

1946 வரை 'மாட்சிமை தங்கிய' மன்னருக்கு விசுவாசம் செலுத்தியவர்கள்தான் காங்கிரசார்

சென்னைக் கூட்டத்தில்

பொதுச்செயலாளர் கருத்துரை

(நமது தனி நிருபர்)

நாம் தேர்தலில் போட்டியிடுகிறோம் என்ற செய்தி கேட்டுக் கலங்கிப் போனவர்கள், இன்று நம்மை வாய்க்கு வந்தபடி ஏசித் திரிகிறார்கள்; 'இவர்கள் எல்லாம் வெள்ளைக்கார தாசர்கள்' என்று பேசுகிறார்கள் அல்லவா? அவர்களுக்கெல்லாம் சாட்டையடி தரும் வகையில் அமைந்துள்ள, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை 27வது வட்ட தி.மு. கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டத்தில் 14-11-56 அன்று ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கத்தை கீழே தருகிறோம்:—

"'இவர்கள் எல்லாம் வெள்ளைக்காரர்களுக்கு தாசர்களாக இருந்தவர்கள்,' என்று நம்மைச் சிலர் ஏசுகிறார்கள். இப்படி ஏசுவோரில் முதன்மையானவர்கள், சென்னை மாநில மந்திரிகளில் சிலராயிருக்கின்றனர்.

"இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள 100-க்கு சுமார் 85 பேர்கள் வரை காங்கிரசில் இருந்தவர்கள்தான்; கதர்ச் சட்டையணிந்தவர்கள்தான்; நான் கூட, அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது துவக்க நாட்களில் காங்கிரஸ் கட்சியில் இருந்தவனே! கதர் அணிந்தவனே! 'வெள்ளையரே! வெளியேறு!' என்று குரல் எழுப்பியவனே!

"இப்படியிருக்க நம்மை வெள்ளைக்கார தாசர்கள் என்று ஏசுகிறார்களே ஏன்?

"வெள்ளையரிடத்தில் ஒரு தம்பிடியேனும் சம்பளம் வாங்கிக் கொண்டு, இன்று கழகத்திலிருப்பவர்கள் எவரேனும் வேலை செய்தது உண்டா? ஏசுகிற எவராவது காட்டுவார்களா?

"இவர்கள், பின் இப்படிக் கூறுவதின் காரணம்தான் என்ன?

"இன்று, தி. மு. கழகத்திலிருப்பவர்கள் திராவிடர் கழகத்திலிருந்தவர்கள்; திராவிடர் கழகம் நீதிக் கட்சியிலிருந்து வந்தது; அந்த நீதிக்கட்சி வெள்ளையர் காலத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது, காங்கிரசுக்குவிரோதமாக! எனவே, 'அவர்கள் எல்லாம் துரோகிகள்; வெள்ளைக்கார தாசர்கள்; அந்தத் தாசர்கள் வழிவந்தோர் இந்தத் தி. மு. கழகத்தினர்' என்று கருதுகிறார்கள்—ஏசுகிறார்கள் போலும்!

"ஆட்டைக் கொல்ல நினைத்த ஓநாய், 'நான் குடிக்கும் நீரை நீ எச்சில்படுத்தாவிட்டாலும் உன் பாட்டன் எச்சில்படுத்தியிருக்கக் கூடும்' என்று கூறியதாக ஒரு கதை கூறுவார்கள்; அந்த ஆடும் ஓநாயும் கதைபோலத்தான் இருக்கிறது, இவர்களின் ஏசலும் பேச்சும்!

"நீதிக் கட்சியின் பேரில்தான் இவர்கள் என்ன குறைகூற முடியும்?

"நீதிக் கட்சி, 'வெள்ளைக்காரர்கள் ஆட்சி ஒழியக்கூடாது; அவர்கள் வெளியேறக்கூடாது; இங்கே இருக்கத்தான் வேண்டும்' என்று என்றாவது பேசியதுண்டா? தீர்மானம் நிறைவேற்றியதுண்டா?

"நீதிக் கட்சியினர் ஆட்சி நடத்தினார்கள் என்பது உண்மை:

"வெள்ளைக்காரர்களின் இரட்டை ஆட்சி முறைச் சட்டத்தை ஏற்றுக்கொண்டார்கள் நீதிக் கட்சியினர்—அதனால் ஆட்சியிலிருந்தார்கள்.

"அந்தச் சட்டத்தை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை—அதனால் அது ஆட்சியிலிருக்க வில்லை, அன்று!

"வெள்ளைக்காரரின் ஒரு சட்டத்தை ஏற்றுக்கொண்டதே, வெள்ளைக்காரருக்கு வால் பிடித்ததாகி விடுமா?—வெள்ளைக்கார தாசர்கள் என்றழைக்கப்படுவதற்கு அதுதான் காரணம் என்றால், காங்கிரசார், வெள்ளைக்காரர் விதித்த எல்லாச் சட்டங்களையும் எதிர்த்துக்கொண்டேயிருந்தார்களா? வெள்ளையர் விதித்த சட்டங்களில் காங்கிரசார் ஏற்றுக் கொண்டவையே கிடையாதா?

"ஏசிப் பேசுவோர் எண்ணிப் பார்க்கட்டும்.

"'காங்கிரஸ்' என்ற பெயரே, ஹியூம் என்ற வெள்ளைக்காரன் வைத்ததாயிற்றே! தங்களுக்குப் பெயர் வைத்தவனே வெள்ளைக்காரன் என்ற அவலமிருக்கும் போது, எங்களை 'வெள்ளைக்கார தாசர்' என்று காங்கிரசாரும் பிறரும் கூறுவதற்கு என்ன அருகதை இருக்கிறது?

"1919-ம் ஆண்டு வரை—காந்தியார் காங்கிரசில் நுழையும் வரை, இந்தக் காங்கிரசின் இலட்சணம் என்ன? 'மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் ஆட்சி நீடூழி வாழட்டும்; அவர் தம் ஆட்சிக்கு விசுவாசமாயிருப்போம்,' என்று முதல் தீர்மானம் நிறைவேற்றிவிட்டுத் தானே காங்கிரஸ் மற்ற வேலைகளைக் கவனித்திருக்கிறது?

"இந்த நிலை மட்டுமா? 1946-ல் அமைந்த இடைக்கால மந்திரி சபை, 1937ல் அமைந்த காங்கிரஸ் மந்திரி சபைகள் எல்லாம் இராஜ விசுவாசப் பிரமாணம்—பிரிட்டிஷ் மன்னராட்சிக்கு விசுவாசம் தெரிவிக்கும் உறுதிமொழி எடுத்துவிட்டுத்தானே பதவியில் அமர்ந்தன? அப்படியிருக்க, எங்களைப் பார்த்து, 'வெள்ளைக்கார தாசர்கள்' என்பது என்ன நியாயம்?

"1914-ல், நீதிக் கட்சியிலிருந்து பெரிய மிட்டாமிராசுகளை எல்லாம் நாங்கள் வெளியேற்றினோம்; அண்ணா அவர்களே தீர்மானம் கொண்டுவந்தார்;—'சர், இராவ்பகதூர், திவான்பகதூர் போன்ற பட்டதாரிகள் இருக்கக்கூடாது; வெள்ளையரால் நியமிக்கப்பட்ட ஜில்லா போர்டு போன்ற மன்றங்களில் உறுப்பினர்களாயிருப்போர் வெளியேறிவிட வேண்டும்' என்று சேலம் மாநாட்டில் அண்ணா தீர்மானம் கொண்டுவந்தார்.

"அப்படியிருக்க, எங்களை எந்த வகையாலே வெள்ளைக்கார தாசர் என்கிறார்கள்?

"நாங்கள் நீதிக் கட்சியிலிருந்து நாத்தியவர்கள் எல்லாம், இன்று எங்கே இருக்கிறார்கள்?

"இன்று காங்கிரஸ் சர்க்கார் சார்பில் நடைபெறும் விருந்துகள், இராசா சர். முத்தையா (செட்டியார்) வீட்டில் அல்லவா?

"செட்டி, பரமேசுவரன், இராமநாதபுரம் இராஜா, மாணிக்கவேலர் இவர்கள் எல்லாம் இன்று காங்கிரஸ் மந்திரி சபையில் அல்லவா இருக்கிறார்கள்?

"இவர்களை அருகில் வைத்துக் கொண்டு, நம்மைப்பார்த்து, 'வெள்ளைக்கார தாசர்கள்,' என்று பேச, மந்திரிகளுக்கு வெட்கமாயில்லையா?

"மந்திரிகள் நம்மை ஏசுவதற்குக் காரணம் எல்லாம், நாம் தேர்தலில் ஈடுபடுகிறோம்; நம்மை எப்படியேனும் தோற்கடிக்கவேண்டும் என்பதினால்தான்!

"நாம் தேர்தலில் தோற்றுவிட்டால் அதோடு கழகம் அழிந்துவிடும்; இவர்கள் எல்லாம் மூலையில் உட்கார்ந்து அழுவார்கள்—என்று சிலர் கருதுகிறார்கள். அல்ல நண்பர்களே, அல்ல!

"தோல்விகள் கழகத்தை அழித்துவிட முடியாது; எங்களை அயரச் செய்துவிடாது; நாங்கள் தோற்றாலும்கூட, மக்களிடத்தில் மீண்டும் மீண்டும் கழகத்தின் இலட்சியத்தை—கொள்கைகளை வலியுறுத்துவோம்; எடுத்துரைப்போம்; விளக்குவோம்; அவற்றின் ஈடேற்றத்திற்காகப் போராடுவோம்; இடைவிடாமல் அவை வெற்றிபெறுவதற்காகப் பாடுபடுவோம்; தோல்வி கண்டு அஞ்சமாட்டோம்—அயரமாட்டோம்; எத்தனையோ தோல்விகளுக்குப் பிறகுதானே இன்று இந்நிலை வளர்ந்திருக்கிறோம்!

"தேர்தல் வெற்றியில்தான் நாங்கள் உயிரை வைத்திருக்கிறோம் என்றோ, தோல்வி கண்டு தொடை நடுங்குவோம் என்றோ எவரேனும் கருதினால் அவர்கள் ஏமாற்றமடைவர்!

"எப்படியேனும் வெற்றி பெற்றே தீரவேண்டும் என்று வெறிபிடித்து அலைபவர்கள் அல்ல, நாங்கள்!"

தொடர்ந்து பேசிய பொதுச் செயலாளர் அவர்கள், புதிய தமிழக அமைப்பு குறித்தும், திராவிட நாட்டின் எல்லை மாநிலப் புது அமைப்புச் சட்டப்படி எதந்தாலு சரியாக வரையறுக்கப்பட்டிருப்பது குறித்தும், திராவிட நாடு அடைய வேண்டுமென்பதற்கான அவசியம் குறித்தும் விளக்கிப் பேசினார்.

150 இடங்களில் நாம் போட்டியிடுவதைக் கூறி, அந்தத் தேர்தல் போராட்டத்தில் தோழர்கள் முழு மூச்சுடன் பணியாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தியும் பேசினார்.

ஹங்கேரியக் குழப்பமும் ரஷ்யாவின் தவறுகளும்

யூகோ அதிபர் டிட்டோ தரும் விளக்கம்

பெல்கிரேட், நவ. 16—

"ஹங்கேரிக்குள் ரஷ்யத் துருப்புக்களை கெரோதான் அழைத்தார்; ஆர்ப்பாட்டம் நடந்துகொண்டு இருக்கும்பொழுது சோவியத் துருப்புகளை அழைத்தது பெருந் தவறாகும்.

"சுட்டுக் கொல்லுவது நிகழ்ந்து கொண்டிருந்தாலுங்கூட ஒரு நாட்டு மக்களுக்குப் புத்தி கற்பிப்பதற்காக மற்றொரு நாட்டு இராணுவத்தை அழைப்பது என்பது மிகப் பெருந்தவறாகும்.

"அது மக்களுக்கு மேலும் ஆத்திரத்தை மூட்டிவிட்டது; ஒரே நேரத்தில் தாமாக மக்கள் கொதித்தெழுந்தனர். தங்கள் விருப்பத்திற்கு, பிற பிற்போக்கு சக்திகளின் கருத்துக்கும் மாறாக, மூண்டுவிட்ட கொந்தளிப்பை கம்யூனிஸ்டுகள் காணலாயினர்."

—இவ்வாறு, யூகோஸ்லாவியா தலைவரான மார்ஷல் டிட்டோ கூறியுள்ளார்.

அவர் மேலும் விளக்கிக் கூறியுள்ளதாவது:—

"அங்கேரியில் பிற்போக்காளர்கள் வலுவடைந்து விட்டனர் கிளர்ச்சியை அவர்கள் தமதாக்கிக் கொண்டனர். இம்ரேநாகி மேலும் சுறுசுறுப்பாகவும், பிற்போக்காளர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் தயக்கமில்லாமலும் இருந்திருப்பாரானல், இரண்டாவது ரஷ்ய இராணுவ குறுக்கீட்டுக்கு ஒரு வேளை வாய்ப்பில்லாது இருந்திருக்கக்கூடும்.

"அங்கேரிய மக்களுக்குள்ளாகவே பொது படுகொலை தொடர்ந்தது; போலீசுக்குப் பழுப்புநிற பூட்சுகள்தரும் வழக்கத்தைக் கொண்டு, பழுப்புநிற பூட்ஸ் அணிந்திருந்தவர்கள் கொல்லப்பட்டனர்.

"அன்னியகுறுக்கீட்டுக்கு எதிராகவே யூகோஸ்லாவியா எப்பொழுதும் இருந்துவருகிறது. குழப்பம், உள்நாட்டுப்போர், எதிர்ப் புரட்சி, ஒரு புதிய உலக யுத்தம் அல்லது சோவியத் குறுக்கீடு—இவை இரண்டில் குறைந்த தீமை எது? ஒன்று பயங்கரமானது; மற்றொன்று தவறானது.

"ஆனால், அந்த நிலையில் சோஷலிசம் அங்கேரியில் காப்பாற்றப்படுகிறது என்றால், நாங்கள் குறுக்கீட்டுக்கு எதிராகஇருப்பதானாலும், சோவியத் குறுக்கீடு அவசியமானது என்றே நாங்கள் சொல்வோம்

"பிரச்சினைகள் அனைத்தையும் இராணுவ குறுக்கீடு தீர்த்து வைத்துவிடும் என்று இப்பொழுதும் ரஷ்யர்கள் எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள்; ஆனால், அது தவறான எண்ணமாகும்."

இவ்வாறு, யூகோ கம்யூனிஸ்டு கட்சியின், தலைவர் டிட்டோ பேசிய பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் தொடர்ந்து கூறியிருப்பதாவது:—

"தனி நபர் தத்துவத்திற்கு வழிகோலும் 'முறை'யைத் தாக்கித் தகர்ப்பதற்குப் பதிலாக, 'தனி நபர் தத்துவத்'தைத் தகர்க்கும் செயலிலேயே தங்களுடைய முழு சக்தியையும் சோவியத் தலைவர்கள் செலவிட்டு வருவது தவறுடையதாகும்.

"ஸ்டாலின் இறந்த பிறகு அவருடைய தவறான போக்கினால் சோவியத் வெளிநாட்டுக் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை புதிய சோவியத் தலைவர்கள் உணரலாயினர். ஏனெனில், மக்கள் சனநாயகத்தைக் கொண்டிருந்த மற்ற நாடுகளின்மீது முன்னுள் சோவியத் தலைவர்களின் கொள்கை வலுவில் திணிக்கப்பட்டதே காரணமாகும்.

"ஸ்டாலினையும் அவர் பின்பற்றிவந்த கொள்கையையும் கண்டிக்க முற்பட்டபொழுது, தங்கள் கண்டனத்தின் இலக்காக, தனி நபர் தத்துவத்திற்குப் பொறுப்பான அமைப்பு முறையைக் கொள்வதற்குப் பதில், தவறுதலாகத் தனி நபர் தத்துவத்தையே கொண்டுவிட்டனர்.

"அது, தனி நபர் தத்துவத்தை மட்டுமே பொறுத்த விவகாரமல்ல; அத்தத்துவத்தைத் தொடர்ந்து

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

இரா. நெடுஞ்செழியன்

சென்னை 17-11-'56 சனி

இஸ்ரேல் பிரச்சினை!

மிகச் சிறிய நாடான இஸ்ரேல், இருபது இலட்சம் மக்களையே கொண்டுள்ள அச்சிறு நாடு எகிப்து நாட்டைத் தாக்கியது. அந்தத் தாக்குதலை, தெளிவான ஆக்கிரமிப்பு என ஐக்கிய நாட்டுச் சபை, அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா, அராபிய நாடுகள் ஆகிய அனைத்தும் ஒரே குரலில் கூறுகின்றன.

கண்ணுக்கு முன்பாகத் தெளிவாகத் தெரிந்த ஒரு உண்மையை ஆக்கிரமிப்பு என்றுதான் கூறவேண்டும். இஸ்ரேலின் அநீதியான அச்செயலை வேறு பெயர் சூட்டி அழைப்பதற்கும் இடமில்லை.

எகிப்துமீது வலிய படையெடுத்துச் சென்று தாக்குதல் நடத்திய இஸ்ரேலை, எந்தவிதக் கடுமையான சொற்களால் கண்டிப்பதானாலும், அது பொருந்தக் கூடியதேயாகும். அந்த நியாயப்படி, இஸ்ரேலை, மற்ற அரசுகள் கண்டித்திருப்பதில் தவறு எதுவும் இருக்கவில்லை.

எகிப்தைத் தாக்கி, கைப்பற்றியுள்ள அந்த நாட்டுக்குச் சொந்தமான சினாய் தீபகற்பத்தை விட்டுவிட்டு, போர் நிறுத்தக் கோட்டுக்குத் திரும்பிவிட வேண்டும் என இஸ்ரேல் கோரப்பட்டிருக்கிறது. அக்கோரிக்கைக்கு இஸ்ரேல் உடனடியாகக் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டும் இருக்கிறது.

இஸ்ரேலுக்கும் எகிப்து நாட்டிற்கும் மீண்டும் சச்சரவு ஏற்படாமல் கண்காணித்து வரவும், இஸ்ரேலுக்கும் மற்ற அரபு நாடுகளுக்கும் இருந்துவரும் பகையை முடிவாகப் பைசல் செய்து வைக்கவும், அப்பகுதியில் உலகப் பாதுகாப்புப் படை ஒன்றை நிறுத்திவைப்பது என்ற முடிவிற்கு ஐக்கிய நாடு சபை வந்திருக்கிறது. அம்முடிவின்படி உலகப் பாதுகாப்புப் படையும் அப்பகுதியில் வந்திறங்கத் தொடங்கி விட்டது.

எகிப்து மீது வலிய தாக்குதல் நடத்திய இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை ஆணித்தரமாகக் கண்டித்ததின் மூலம், தங்களுக்குள்ள நியாய புத்தியையும் சிக்கலைத் தீர்த்துக்கொள்வதற்கு படையெடுப்பு விரும்பத்தகாதது என்ற தங்கள் இலட்சியப் பற்றையும், உலக நாடுகள் வெளிப்படுத்திக் கொண்டுள்ளன. இஸ்ரேலைக் கண்டித்த அளவுடன் உலக நாடுகளின் கடமையும் பொறுப்பும் தீர்ந்துவிடவில்லை. இஸ்ரேலுக்கும், பொதுவாக அரபு நாடுகளுக்கும் குறிப்பாக எகிப்துக்கும் இருந்துவரும் பகை உணர்வையும் தீர்த்து வைக்கவேண்டிய புனிதமான பொறுப்பும் கடமையும் உலக நாடுகளுக்கு இருந்துவருகின்றன.

இஸ்ரேல், முதல் முதலாக 1947-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அன்று முதல் யூத மக்களின் தாயகமாக விளங்கத் தொடங்கியது.

யூதர்களின் தாயகமான இஸ்ரேல் நாட்டை, அது உருவெடுத்த நாள் தொட்டு, அதை ஒரு நாடு என ஒத்துக்கொள்ள முடியாது என்று எகிப்துகூறி அத்துடன் பகை பாராட்டி வருகிறது. எகிப்து போக்கைப் போன்றதுதான் அராபிய நாடுகளின் நிலையும்.

மேற்கு ஆசியாவில் இருந்து வரும் தொல்லைக்கான மூல காரணங்குறித்து இஸ்ரேல் நாட்டின் முன்னாள் பிரதமர் விளக்கம் தந்துள்ளார். அது வருமாறு:—

"நிலைபெற்றுள்ள இஸ்ரேலை ஒரு சுதந்திர நாடுதான் என்று அங்கீகரிக்க தொடர்ந்து எகிப்து மறுத்து வந்திருப்பதில், இன்றைய குழப்பத்திற்கான மூல காரணத்தைப் பார்க்கமுடியும்.

"சமாதானமான பேச்சு வார்த்தைகள் நடத்துவதையும் எகிப்து எதிர்த்தே வந்திருக்கிறது.

"எகிப்து எப்போதும், இஸ்ரேலுடன் தான் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகவே கூறி வந்திருக்கிறது. இந்தப் பயங்கரமான உண்மையையும் நாம் கணக்கில் எடுத்துக் கொண்டாகவேண்டும்.

"இஸ்ரேலுக்கு எதிராக எகிப்து, ஒரு 'கடல் வழி'த் தடுப்பை மேற்கொண்டு வந்திருக்கிறது. சூயஸ் கால்வாய் வழியாக இஸ்ரேல் கப்பல்கள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

"இஸ்ரேலுக்குள் கொள்ளையும் கொலையும் நடைபெறுவதாக எகிப்து பிரச்சாரம் செய்து வந்திருக்கிறது. எகிப்திய கலகக்காரர்கள், கூட்டம் கூட்டமாக இஸ்ரேலுக்குள் நுழைந்து, கொலை பல புரிந்திருக்கின்றனர்."

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"சமாதானம்தான் வேண்டும்; யுத்தமல்ல என்பதே எங்கள் கொள்கை; நம்மில் அனைவருக்கும் பாதுகாப்பளிக்கும் சமாதானம் வேண்டும். எப்போதும், 'சாகடிக்கப்படுவோம் — கொல்லப்படுவோம்,' என்ற அச்சுறுத்தலுக்கிடையே நாங்கள் வாழ விரும்பவில்லை."

இஸ்ரேல் முன்னாள் பிரதமர் சாரேட் கூறியுள்ளவை சார்புடைய தகவலாக இருக்கக் கூடும் என்றாலும், இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் உள்ள சிக்கலைத் தீர்த்துவைப்பதில் கருதத்தக்கது என்பதில் ஐயமில்லை.

எகிப்து நாட்டிலும் தன்னைச் சுற்றியுள்ள அரபு நாடுகளிலும் மண்ணாசை கொள்ள வேண்டிய கட்டாயம் இஸ்ரேலுக்கு இருக்கிறது என சொல்வதற்கில்லை.

இஸ்ரேலைச் சுற்றியுள்ள அரபு நாடுகள் தொழில் வளமின்றி, விவசாய நலமற்று இப்பொழுதும் இருந்துவரும் நிலையிலும், தமது மணற்பாங்கான பூமியைத் தங்களுடைய உழைப்பாலும் முயற்சியாலும், பல பொருள் விளையும் பாங்குள்ள நாடாக மாற்றியும், தொழிற்சாலை பல ஆக்கியும், இஸ்ரேலைத் திருத்தி அமைத்துள்ளனர் யூத மக்கள்.

தங்கள் மத்தியில் யூதர்களும் அவர்களைக்கொண்ட ஒரு நாடும் அறவே இருக்கக்கூடாது என்ற எண்ணத்தில், எகிப்தும் மற்ற அராபிய நாடுகளும் இருந்துவருகின்றன. இந்த உண்மை, லெபனான் தலைநகரில் கூடிய அரபு நாடுகளின் மாநாட்டிற்கு, 'இஸ்ரேல் என்ற ஒரு தனிநாடே இருக்கக் கூடாது; அது அழிக்கப்பட வேண்டும்' என்ற கருத்து கொண்ட ஒரு குறிப்பை ஈராக் அரசாங்கம் அனுப்பி இருந்ததின் மூலம் உறுதியாகிறது.

ஈராக்கின் கோரிக்கையில் இருக்கும் கருத்து பயங்கரமானது என்பதுடன், மேற்கு ஆசியப் பகுதியில் இருந்துவரும் சிக்கலுக்குப் பரிகாரம் கூறுவதாகவும் இருக்கவில்லை. மேலும், இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இருந்துவரும் பகையைத் தீவிரமாக்குவதற்கே பயன்படக் கூடியதாக இருக்கிறது.

எகிப்துமீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலை, 'தெளிவான ஆக்கிரமிப்பு' என்று கண்டித்துக் கூறிய இந்தியப் பிரதமர் கூட, 'இஸ்ரேலிடம் எங்களுக்கு எதுவும் பகை கிடையாது' எனக் குறிப்பிட்டிருக்கிறார். அதுவுமன்றி, 'இஸ்ரேலோ அல்லது யூதர்களோ அழிக்கப்பட்டுவிட வேண்டும் என நான் நினைத்துக் கொண்டில்லை' என்றும் இந்தியப் பிரதமர் விளக்கம் தந்துள்ளார்.

'இன்றுள்ள எகிப்து, லெபனான், சிரியா, இஸ்ரேல்' என்ற அடிப்படையில் அரபு நாடுகளுடன் இஸ்ரேல் சமாதானமாக வாழ விழைகிறது என, இஸ்ரேலின் விழைவை, முன்னாள் அமைச்சர் தெளிவாக்கி இருக்கிறார். இந்தத் தொல்லை தரும பிரச்சினையில், அரபு நாடுகளின் நலன்களுக்குப் பாதக மேற்படாமலும் இஸ்ரேலின் தனித் தன்மைக்குக் கேடு நேராமலும், பரிகாரம் தேட வேண்டிய பொறுப்பு ஐக்கிய நாடு சபைக்கு இருந்து வருகிறது.

மண்டல சபைக் கூட்டங்கள்

மத்திய உள்நாட்டமைச்சரே தலைவராம்

புதுடில்லி, நவ. 15—

மாநிலப் புது அமைப்புச் சட்டப்படி நிறுவப்படுகிற ஐந்து மண்டல சபைகளும் கூடுகிறபோதெல்லாம் மத்திய உள்நாட்டிலாகா மந்திரி அந்தக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார் என்று தெரியவருகிறது.

ஒவ்வொரு மண்டல சபைக்கும், ஒரு நிரந்தர கூட்டுச் செயலாளரின் தலைமையில் ஒரு தனி அலுவலகம் இருக்கும் என்றும், மண்டல சபைக் கூட்டங்கள் ஆண்டுக்கு இருமுறையேனும் நடத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

ஒவ்வொரு மண்டல சபையும், அந்தந்த மாநில முதன் மந்திரி, நிதி மந்திரி, அபிவிருத்தி மந்திரி ஆகியோரையும் மத்திய உள்நாட்டு அமைச்சரையும் கொண்டதாக இருக்கும் என்றும், ஓராண்டுக்கு ஒருமுறை மண்டலத்தில் உள்ள மாநிலங்கள் ஒவ்வொன்றிலாக சபைக் கூட்டங்கள் நடைபெறும் என்றும், கூட்டம் நடைபெறுகிற மாநிலத்தைச் சேர்ந்த முதன் மந்திரி உதவித் தலைவராக இருப்பார் என்றும் கூறப்படுகிறது.

தென்மண்டல சபையில்!

சென்னை, நவ. 14—

முதலமைச்சர் காமராசர், பக்தவத்சலம், சுப்பிரமணியம் ஆகிய மூவரும் சென்னை மாநிலத்தின் பிரதிநிதிகளாகத் தென்மண்டல சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

ரஷ்யா வழங்கும் நீண்ட காலக் கடன் உதவி

$2\frac{1}{2}$-சதவிகித வட்டிக்கு ரூ. 60 கோடி பெற்றுக்கொள்ள டில்லி சம்மதம்

புதுடில்லி, நவ. 15—

நீண்ட காலக் கடனாக ரஷ்யா அளித்துள்ள 50 கோடி ரூபிள் (சுமார் ரூ 60 கோடி) தொகையை ஏற்றுக்கொள்ள டில்லி சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

12 தவணைகளில் திருப்பித் தரக் கூடிய இந்தக் கடனுக்கு $2\frac{1}{2}$ சதவிகித வட்டி விதிக்கப்படும் என்றும், இந்த நிபந்தனைகள் பிலாய் உருக்குத் தொழிற்சாலைக்கு ரஷ்யா வழங்கியுள்ள கடன் நிபந்தனைகளைப் போன்றதே என்றும் கூறப்படுகிறது.

கம்களம், ஜமுக்காளம் நெசவுத் தொழில்

திருச்சியில் பயிற்சி நிலையம்

சென்னை, நவ 15—

கம்பளி, ஜமுக்காளம் ஆகியவைகளின் நெசவுத் தொழில் சம்பந்தமாக உற்பத்தி—பயிற்சி நிலையம் ஒன்று, திருச்சி மாவட்டம் கோலக்குடியில் நிறுவப்படும் எனத் தெரிகிறது.

ஆண்டிற்கு 12 பேர்களுக்கு இத்துறையில் பயிற்சியளிக்கப்படுமாம். பயிற்சி முடிந்ததும் ரூ 150 வட்டியில்லாத கடனாக அளிக்கப்படுமாம். 5 ஆண்டுகள் இந்தப் பயிற்சி நிலையம் நீடித்து, பிறகு கூட்டுறவு நிலையமாக இயங்குமாம்.

மன்னார்குடியில் தச்சுவேலை பயிற்சி நிலையம்

தஞ்சாவூர், நவ. 13—

தஞ்சை மாவட்ட கலெக்டர் திருபர்கள் கூட்டத்தில், மன்னார்குடியில் தச்சு, கொல்லு வேலைகளுக்குப் பயிற்சி அளிப்பதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு ரூ. 5,90,000 செலவிடுவதற்கு அனுமதி பெற்றுள்ளதாகவும், 15 நபர்களுக்கு துவக்கத்தில் பயிற்சியளிக்கப்படும் என்றும், அவர்களுக்கு மாதம் ரூ 30 உபகாரச் சம்பளம் அளிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

சிமெண்டிற்குப் பதில் 'போஜோலான்' பயன்படும்

நங்கல், நவ. 15—

காங்கிரீட் வேலைகளில் சிமெண்டிற்குப் பதில் 'போஜோலான்' என்பதை உபயோகிக்கலாம் எனக் கூறப்படுகிறது. பக்ராவில் இது, பரிசோதனைக்குப் பயன்படுத்தப்படுகிறதாம்; இதைத் தயாரிக்கும் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டுள்ளதாம்.

5-இலட்சம் கைத்தறிகள் பதிவு செய்யப்பட்டதாம்!

புதுடில்லி, நவ. 14—

இதுவரையில் 5,63,495 கைத்தறிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பங்களை ஏற்பதற்கான கடைசித் தேதி நவ. 30 என்றும் உற்பத்தி, தொழில் அமைச்சர் கனுங்கோ மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் வாழ்க்கைப் புள்ளி விவரம்

சென்னை, நவ 14—

அக். 27-ம் தேதியோடு முடிவடைந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுக் குறி 363 புள்ளியாக இருந்தது; காய்கறிகள், மிளகாய் போன்றவற்றின் விலை உயர்வே இதற்குக் காரணமாம்.

விற்பனை வரி கிடையாதாம்

சென்னை, நவ. 15—

அரசாங்கத்திற்கு விற்பனை செய்யப்படும் 'சர்க்கா'க்களுக்கும் மற்ற நூற்புச் சாதனங்களுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

ருமேனியாவிலும் ரஷ்யாவுக்கு எதிர்ப்பு?

அதிகாரிகளின் பேச்சை மக்கள் மதிக்கவில்லையாம்

ருமேனியா மற்றொரு கம்யூனிஸ்டு நாடாகும்; இங்கும் ரஷ்யாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், கலகங்கள், கைது செய்யப்படுதல் முதலியன நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரென்றும் ஏராளமான பேர் காயமடைந்துள்ளனர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

ரஷ்யாவுக்குச் சாதகமாகப் பேசி மக்களைக் கட்டுப்படுத்த கம்யூனிஸ்டு அதிகாரிகள் அனுப்பப்பட்டனராம்; ஆனால் பொதுமக்கள் அவர்களின் சமாதானப் பேச்சிற்கு செவிசாய்க்காததுமன்றி, அவர்களைப் பகிரங்கமாகக் கேலி செய்து, கூச்சல் போட்டுக் கண்டித்து அனுப்பிவிட்டனராம்; பின்னர், துருப்புகள் அனுப்பப்பட்டனவாம்.

மங்கோலியாவில் கொந்தளிப்பு?

ஆஸ்டிரியா, நவ. 15—

மங்கோலியாவிலும் ரஷ்ய எதிர்ப்பு உணர்ச்சி ஏற்பட்டுள்ளதாம். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனராம்! வேலைக்கு வராதவர்களைத் தாக்கியும், கொலையும் புரிந்துவருகின்றதாம் ரஷ்யத் துருப்புகள்!

நல்ல ஜனநாயகவாதி

லண்டன், நவ. 15—

பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரியான அந்தோனி நட்டிங், அண்மையில், பிரிட்டனின் மத்திய கிழக்குக் கொள்கையைக் கண்டித்து, தான் வகித்துவந்த மந்திரி பதவியை இராஜிநாமாச் செய்தார் அல்லவா? அவர் இப்போது தனது மக்கள்சபை உறுப்பினர் பதவியையும் இராஜிநாமாச் செய்துவிட முடிவு செய்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

கிழக்கு நாடுகளின் தூதுவர்களுடன்......

பாகிஸ்தான் பிரதமர் பேசினாராம்

பாகிஸ்தான் பிரதமர் மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்களை அழைத்து, பல விவகாரங்கள் குறித்துப் பேசியதாகத் தெரிகிறது.

வெளிவிவகார மந்திரி

பாகிஸ்தான் வெளி விவகார மந்திரியான பொரோஸ் கான் நூன், லண்டனில் பேசும்போது, 'இஸ்ரேல் நிலைபெற்றுவிட்ட ஒரு நாடு' என்று கூறியதற்காக அவரிடமிருந்து விளக்கம் கேட்கப்பட்டிருப்பதாக பாக். பிரதமர் சுராவர்த்தி பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

அலட்சியப் போக்குதான் இதற்குக் காரணமா?

புதுடில்லி, நவ. 14—

கொழும்பு அரசுகள் மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா, தாம் இலங்கை இந்தியர் பிரச்சினையைக் குறித்து பண்டித நேருவிடம் ஒன்றும் பேசவில்லை என்றும், அதைக் குறித்து அடுத்த ஆண்டு ஜனவரியில் விவாதிக்க டில்லி வரக்கூடும் என்றும் அறிவித்துள்ளார்.

காங்கிரசாருக்கு மக்கள் கற்பித்த பாடம்

மதுராந்தகம், நவ. 13—

13—11—56-ல், காங்கிரசுக் கட்சி சார்பில், விசயராகவலு ரெட்டியார் தலைமையில் விபூதி-வீரமுத்து என்பவர் பேசும்போது, 'வெள்ளைக்காரருக்கு நாட்டைக் காட்டிக்கொடுத்த ஜஸ்டிஸ் கட்சி இன்று சுயமரியாதைக் கட்சி—பகுத்தறிவுக் கட்சி—தி. மு. கழகம் என்ற பெயரால் நாட்டில் இளைஞர்களைப் படிக்கவிடாமல் பாழ்படுத்தி வருகிறது; அந்தக் கட்சியைச் சுட்டுச் சாம்பலாக்கி சாக்கடையில் கலக்காமல், நாட்டில் பெருந்தன்மையோடு காங்கிரஸ் உலவவிட்டுள்ளது' எனக் கூறிவிட்டு, அண்ணா அவர்கள் கூறாத சில அபாண்டங்களைக் கூறினதாக அந்தப் பண்டாரம் பேசினார்.

அது கேட்ட கூட்டத்திலிருந்த பொதுமக்கள், 'அண்ணா அவர்கள் அப்படிப் பேசவில்லை; ஆதாரம் காண்பி; இல்லையேல் பேசாதே' என்று மேடையை நோக்கிச் சென்றார்கள்.

உடனே போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் மேடைமீது ஏறி, ஒலி பெருக்கி மூலம் மக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்; மக்கள் அடங்கவில்லை.

உடனே தி. மு. கழகச் செயலாளரைக் கூப்பிட்டு, மேடைமேல் ஏற்றி பொதுமக்களை அமைதியாக இருக்கச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

காங்கிரஸ்காரர் விருப்பத்திற்கு இணங்க, தி. மு. கழகச் செயலாளர் மேடைமேல் சென்று கூட்டத்தினரை அமைதியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்; மக்கள் அமைதியடைந்தனர்.

செயலாளர், விபூதி-வீரமுத்துவை, 'மக்கள் கேட்கும் ஆதாரத்தைக் காண்பித்துவிட்டு, தொடர்ந்து எவ்வளவு வேண்டுமானாலும் கழகத்தைத் தாக்கிப் பேசுங்கள்' என்று சொன்னார்.

வீரமுத்து, 'ஆதாரம் காண்பிக்க முடியாது' என்று சொன்னார்.

கூட்டத்திலிருந்த பொதுமக்கள், 'பதிலும் ஆதாரமும் சொல்லாமல் பேசாதே' என்று கூச்சலிட்டார்கள்.

போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், 'பதில் சொல்லாமல் நீங்கள் மேடைமேல் அவர்களைத் தாக்கிப் பேச வேண்டாம்' என்று வீரமுத்துவிடம் சொல்லி கூட்டத்தை உடனே கலைத்துவிட்டார்.

கூட்டத்தில் எந்தவித அசம்பாவிதமான சம்பவங்களும் ஏற்படவில்லை. கூட்டம் சுமார் 10 நிமிடந்தான் நடந்தது. (ந நி.)

கோடம்பாக்கத்திற்கு குடிதண்ணீர் வசதி

நகரசபை அதிகாரி உறுதிமொழி

சென்னை — கோடம்பாக்கத்திற்குக் குடிதண்ணீர், சாக்கடை வசதிகளை அளிக்கத் தாம் உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதாகவும், சாலைகளில் சாக்கடைத் தண்ணீர் வழிந்துசெல்வது சுகாதாரத்திற்குக் கேடு பயக்கும் என்பதைத் தாம் உணர்ந்திருப்பதால், விரைவிலேயே சாக்கடைத் தொட்டிகளை அகற்றிவிட்டு அவைகளுக்குப் பதிலாகத் திறந்த சாக்கடைகளைக் கட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் சென்னை நகராண்மைக் கழகக் கமிஷனர் திரு. பாலசுந்தரம் அவர்கள் கோடம்பாக்கம் பொதுநல சங்கச் சார்பில் கடந்த 11-ந் தேதியன்று நடைபெற்றக் கூட்டம் ஒன்றிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அப்பகுதி மக்களுக்கு உறுதி அளித்திருக்கிறார்.

மேலும் அவர், மின்சார விளக்குகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, சாலைகளை நன்றாக அமைத்தல், தெருக்குழாய்களை மேலும் அதிகமாக்குதல், மலேரியா தடுப்பு நடவடிக்கை போன்ற வேலைகளையுங்கூட உடனடியாகக் கவனிக்க இருப்பதாகவும் கூறினார்.

கூட்டத்திற்கு முன்னர் மேற்படி சங்கச் செயலாளர் திரு. கே. வி. பாலசுப்பிரமணியம் அவர்கள், கமிஷனர் அவர்களை அழைத்துச் சென்று சூளைமேடு, சௌராட்டிர நகர், கிருட்டிணாபுரம், சக்கரியா காலனி, டெய்லர்ஸ் எஸ்டேட், அக்பராபாத், அஜீஸ் நகர், பரங்குசபுரம், ரங்கராசபுரம், விசுவநாதபுரம், புலியூர், யுனைடெட் இந்தியா காலனி போன்ற பகுதிகளைக் காட்டி, அப்பகுதிகளில் செய்ய வேண்டிய தேவையான வேலைகள் குறித்து விளக்கியிருக்கிறார்.

இக்கூட்டத்தில், மேற்படி சங்கத் துணைத் தலைவர் டி. கே. மகாதேவன், ஜே பி அனுமந்தராவ், பி. ஆர். எஸ். கோபால் ஆகியோர் அப்பகுதி மக்களின் குறைகளை எடுத்துக் கூறினர்.

திரு. வி சேஷன் நன்றி தெரிவிக்க, கூட்டம் முடிவுற்றது.

நஷ்ட ஈடு கோரி 98 மனு

ஹைதராபாத், நவ. 13—

கடந்த செப்டம்பர் முதல் தேதி ஏற்பட்ட மெகபூப் நகர் இரயில் விபத்தையொட்டி ரூ 11 இலட்சம் பெறுமானத்திற்கு, நஷ்டஈடு கோரி 98 மனுக்கள் வந்துள்ளதாகத் தெரிகிறது.

திருச்சியில் தமிழக அமைப்பு விழா

அண்ணா, என்.வி.நடராசன் கலந்துகொண்டனர்

தேர்தல் நிதிக்கு தி. மு. க. மாணவர் கிளையின் பேருதவி

திருச்சி தி. மு கழக மாணவர் கிளையின் நான்காம் ஆண்டுத் துவக்கச் சிறப்புக் கூட்டமும் தமிழக அமைப்பு நாள் விழாவும் 11—11—56 காலை 10 மணிக்கு, தேவர் மன்றத்தில் நடைபெற்றது.

மாணவர் கிளையின் துணைச் செயலாளர் அ. நடராசன் தலைமை வகித்தார்.

திருச்சி மாவட்ட தி மு. கழகச் செயலாளர் அன்பில்—தருமலிங்கம் அவர்கள், அமைச்சர்களின் போக்கினைக் கண்டித்துப் பேசினார்.

அடுத்து, துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன், காமராசரும் மற்ற அமைச்சர்களும், தமிழ் மாநில அமைப்பில், தமிழ் மாநிலத்தோடு சேர வேண்டிய பகுதிகளைப் பெறத் தவறியதைக் கண்டித்தும், அதற்காகத் தி. மு. கழகமும் பிற கட்சிகளும் நடத்திய தீவிர கிளர்ச்சிகளையும், தமிழ் நாடு எனப் பெயரிடவும் மனமில்லாத காமராசரின் போக்கினையும் குறிப்பிட்டுப் பேசினார்.

இறுதியாக அண்ணா அவர்கள், பொதுத் தேர்தல் சூழ்நிலை பற்றியும் மாணவர்களின் கடமையையும் விளக்கி அரியதோர் சொற்பொழிவாற்றுகையில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பிற கட்சிகளுக்கும் உள்ள வேறுபாட்டினையும், திராவிட முன்னேற்றக் கழகம் நம் தாய் நாட்டை சுதந்திரமுடன் இயக்கச் செய்வதற்காகப் பணியாற்றும் மாபெரும் இயக்கமென்பதை விளக்கியதுடன், பொதுத் தேர்தலில் கழகத்திற்குப் பேராதரவு தருமாறு வேண்டிக்கொண்டும், திருச்சியிலுள்ள மாணவர் கிளையின் முயற்சிக்குத் தமது பாராட்டுதலையும் தெரிவித்தார்கள்.

தேர்தல் நிதிக்கு திருச்சி மாணவர் கிளையின் சார்பில் ரூ. 750/ அண்ணா அவர்களிடம் அளிக்கப்பட்டது.

தோழர் கே. வி. கே. சாமியின் பிரிவுக்கு வருந்தியும் அனுதாபம் தெரிவித்தும், விருதுநகர் சங்கரலிங்கனாரின் தியாக உணர்ச்சியைப் பாராட்டியும் அரசியலார் செய்த அநீதியைக் கண்டித்தும், கேரள - ஆந்திர மாநிலங்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளை மீட்கும் பிரச்சினையில் காமராசர் செய்த துரோகத்தைக் கண்டித்தும், சென்னை ராஜ்யத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயரிட வேண்டுமென்று வற்புறுத்தியும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் கண்டித்தும், இந்தியைத் திணிக்கும் போக்கினை எதிர்த்தும், தமிழகத்தில் தமிழே ஆட்சி மொழியாக இருத்தல் வேண்டுமென்றும், தமிழ் மொழியைப் பல்கலைக் கழகங்களின் போதனா மொழியாக ஆக்குமாறும், வெளிநாடுகளுக்குச் சென்று படிப்பதற்கான உதவித் தொகை பெறுவதற்கு நம் தமிழக மாணவர்கள் மட்டும் ஐந்து மதிப்பெண்கள் அதிகம் பெறவேண்டும் என்ற திட்டத்தை எதிர்த்தும், அதனை உடனடியாக வாபஸ் பெறவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் இளங்கை இளங்கோவன் நன்றி நவில, விழா இனிது முடிவுற்றது.

தேர்தல் நிதி தாரீர்!

வரவு :	ரூ. அ. பை
முன் (13—10—56) இதழ்ப்படி	2334—5—9
சென்னை கோகலே மண்டபச் சிறப்புக் கூட்டம் (24-10-56)	1277—8—0
முக்கூடல் தி. மு. கழகச் சார்பில் நடந்த தூத்துக்குடி தோழர் ஜி. அப்பாசாமி அவர்களின் 'மந்திரமா? தந்திரமா?' நிகழ்ச்சியின் மூலம் வசூல் ஆனதில் செலவு நீக்கி தோழர் எம். எஸ். முத்துகுட்டி அவர்கள் மூலம்	70—0—0
பெத்தநாய்க்கன்பாளையம் தி. மு. கழகம் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. மூலம்	25—0—0
அணியாப்பூர், அரசு நிலையம் தி. மு. கழகம்	20—0—0
சென்னை செ. கோ. அப்துல் லாசா	3-10—0
சென்னை-12. ராஜகுமார்	3—0—0
,, கா. மு. சாலி	2—0—0
,, ம. க. அ. மு. முகைதீன்	2—0—0
1—0—0 நன்கொடை கொடுத்த தோழர்கள்	
தணிகாசலம், நல்லையா, எஸ். பி. தாண்டவன், மேலூர் கே. வி. கே. சாமி மன்றம், முகம்மது சாலி, சரீப், த. மு. அப்துல் அசன், கண்ணன், பிச்சனூர் கைத்தறி நெசவாளர் முன்னேற்ற சங்கம் (1-9-3), காட்பாடி கா. பெ. சி. (1—0—6), கே. எஸ். மணி (1-2-0) ஆக மொத்தம்	12-11—9
0—8—0 கொடுத்த தோழர்கள்	
மு. அ. லத்தீபு, மூசா நய்னா, சம்சுல் குலாம், ஆறுமுகம், அனீபா, மகம்மது, சேக் முகம்மது ஆகியோர்	3—8—0
0—4—0 கொடுத்த தோழர்கள்	
சரிபுதீன், சத்திரசு, ஜெயினலாப்தீன்	0-12—0
ஆக மொத்தம் ரூ.	3,754—7—6

சங்கரலிங்கனார் மறைவுக்கு விடுதலை வீரர்கள் வணக்கம்

★

சென்னை

1-வது வட்டம்;

21—10—56 காலை 9 மணிக்கு தோழர் க. பட்டாபி தலைமையில் தங்கம் தியேட்டரிலிருந்து ஊர்வலம் துவங்கி முதல் வட்டம் முழுமையிலும் சுற்றி கே வி. கே. சாமி படிப்பகத்தில் முடிவுற்றது.

8-வது வட்டம் :

21—10—56 காலை 9 மணிக்கு தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் கழகப் பணிமனையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

21-வது வட்டம் :

23—10—56-ல் கிளைக் கழகத்தில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தோழர்கள் கே. வி. கே சாமி, சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

30-வது வட்டம் :

14—10—56 காலை கிளைக் கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொதுச் செயலாளர் அவர்கள் விடுத்திருந்த அனுதாபச் செய்தியினை துண்டுப் பிரசுரங்களில் அச்சடித்து வட்டப் பொதுமக்களுக்கு வழங்கினார்கள்.

32-வது வட்டம் :

21—10—56 காலை 9 மணியளவில் கிளைக் கழகப் பணிமனையில் தோழர் இளம்பிறை தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் சர்வ கட்சித் தோழர்களும் கலந்துகொண்டனர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

46-வது வட்டம் :

14—10—56 காலை 8 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் தோழர் இராம வெள்ளையன் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தோழர்கள் டி. வி நாராயணசாமி, இரா அசமழகன், கை. பிரமையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வ.உ.சி. சவுந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகம்

17—10—56 மாலை 7 மணிக்கு சென்னை—சூளை, ஊ. பு அ. சவுந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகத்தில் தோழர் பாலகுமாரன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகம் :

14—10—56 காலை 9 மணிக்கு மேற்படி கழகத்தில் (10, லயர் சின்னத்தம்பி முதலி தெரு) நடைபெற்றக் கூட்டத்தில் இரண்டு நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அழகிரி மன்றம் :

17—10—56 இரவு 9 மணிக்கு சென்னை 7-வது வட்டம் அழகிரி மன்றத்தில் தோழர் துரை-செல்வராசன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

அழகிரி நினைவு மன்றம் :

21—10—56 காலை 11 மணிக்கு சென்னை 31-வது வட்டம் அழகிரி நினைவு மன்றத்தில் தோழர் அந்தோனி எப். மாறன் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

அண்ணா படிப்பகம் :

21—10—56 இரவு 9 மணிக்கு சென்னை—புதுப்பேட்டை அண்ணா படிப்பகத்தில் தோழர் எம். முத்தன் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் இரண்டு நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகம்

21—10—56 காலை 9 மணிக்கு. சென்னை வேளாளத் தேனாம்பேட்டை மேற்படி கழக இல்லத்தில் தோழர் ஜி சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தோழமைக் கழகம்

30—9—56 காலை 9 மணிக்கு, சென்னை - சேப்பாக்கம் டாக்டர் நடேசன் நகர் (40-வது வட்டம்) தோழமைக் கழகத்தில் தோழர் மா. வெ. இளங்கோ தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் இளம்பரிதி, நீலநாராயணன், அரங்கசாமி, நெடுமாறன், மா. பா. சாரதி, ம. செ த மூர்த்தி ஆகியோர் சொற்பொழிவாற்றினர் தோழர்கள் கே. வி கே. சாமி, சங்கரலிங்கனார் மறைவு குறித்து அனுதாபத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

ஔவை தமிழ்ச் சங்கம்

15—10—56ல் சென்னை - திருவல்லிக்கேணி மேற்படி சங்கத்தில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருவொற்றியூர் :

22—10—56 மாலை, சென்னை-திருவொற்றியூர் இம்பீரியல் டொபாக்கோ கம்பெனித் தொழிலாளர் சங்கப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் எம். வி. நாராயணசாமி தலைமையில் நடைபெற்றபோது சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோவை :

21—10—56-ல், கோவை 12-வது வட்ட கிளைக் கழகச் சார்பில், அருந்தியர் வீதியில் நடைபெற்ற சங்கரலிங்கனார் அனுதாபப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், சி. டி. தண்டபாணி, எஸ் ஏ. இராசமாணிக்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முக்கூடல் :

21—10—56 இரவு 8 மணிக்கு நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கொளாநல்லி :

21—10—56ல், தோழர் எம் இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பள்ளிகொண்டா :

25—10—56 இரவு கிளைக் கழகப் பணி மனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இரண்டு நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டு தோழர்கள் கே. வி கே சாமி, சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

நவ. 18: காமன்வெல்த் எதிர்ப்பு தினம்

மாபெரும் பொதுக்கூட்டம்

18-11-56 மாலை 6-மணிக்கு, சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் தோழர் எச். டி. இராசா எம்.பி. தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் என். வி. நடராசன், ப. ஜீவானந்தம், எ. சுப்பிரமணியம், எம். ஆர். வெங்கட்டராமன், காஞ்சி-கல்யாணசுந்தரம், எஸ். இராமநாதன், கே. அருணாசலம், எஸ். கிருஷ்ணமூர்த்தி, எஸ். விஜயலட்சுமி ஆகியோர் பேசுவர்.

குறிப்பு:—அன்று மாலை 3-மணிக்கு சேப்பியர் பார்க்கிலிருந்து மாபெரும் சர்வ கட்சி ஊர்வலம் புறப்பட்டு கடற்கரை வந்து அடையும்.

தமிழக அமைப்பு விழா

18-11-56 காலை 10 மணிக்கு, சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில் பனைமரத்தொட்டி அட்டபாளையம் பஜனைக்கோவிலில் திரு. அ. முனுசாமி தலைமையில் மேற்படி விழா நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

புதுவை சென்னையுடன் இணையும் பிரச்சினை

சட்டபூர்வ அதிகார மாற்றத்திற்குப் பிறகே கவனிக்கப்படுமாம்

புதிய கமிஷனர் எம். கே. கிருபளானி தகவல்

புதுவை, நவ 16—"அன்னியர் பிடியிலிருந்த ஒரு பிரதேசத்தை நாம் மீட்டு விட்டபின், அந்தப் பகுதியை நாட்டின் இதர பகுதிகளுக்குச் சமமாக அபிவிருத்தி செய்தாக வேண்டும். நிகழக்கூடிய மாறுதலை மக்களே உணருவதாக இருக்கவேண்டும்,"

என்று, புதுவை மாநிலத்தின் புதிய பிரதம கமிஷனராகப் பதவி ஏற்றிருக்கும் எம். கே. கிருபளானி தெரிவித்திருக்கிறார்.

"சட்டபூர்வமான அதிகார மாற்றம் இன்னும் சில காலத்தில் ஏற்பட்டுவிடும். புதுவை சென்னையுடன் இணைவது என்ற பிரச்சினை இப்போதைக்கு இல்லை.

"சட்ட பூர்வ அதிகார மாற்றத்திற்குப் பிறகு தேர்தல் நடக்குமா என்பதும் எனக்குத் தெரியாது. இவை எல்லாம் அதிகார மாற்றம் நிகழ்ந்த பிறகு முடிவு ஆகவேண்டியவை"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கேவல் சிங்

புதுவைப் பிரதம கமிஷனராக இதுகாறும் இருந்துவந்த கேவல் சிங், இப்போது டில்லியில் வெளிவிவகார இலாகா துணைச்செயலாளராக பதவி ஏற்கச் செல்கிறார்; அவருக்கு ஒரு பிரிவு உபசாரம் நடைபெற்றது.

இயற்கையா-செயற்கையா?

புதுடில்லி, நவ. 14—உதகமண்டலத்திலிருந்து 17-மைல் தூரத்திலுள்ள முகூர்த்தி என்ற இடத்தில் சென்னை அரசாங்கம் செயற்கை முறையில் மழை பெய்ய வைப்பதற்குப் பரிசோதனை நடத்தினர்; ஆனால் இந்த மழை இயற்கையாகவே பெய்ததா அல்லது செயற்கையாகப் பெய்ததா என்று சென்னை அரசாங்கத்திற்குத் தெரியவில்லை என்று பாராளுமன்றத்தில் கூறப்பட்டுள்ளது.

சென்னை மாநில தேர்தல் அதிகாரி

சென்னை அரசாங்க மராமத்து இலாகாவின் துணைச்செயலாளராக உள்ள எம் ஏ. ஷெரீப், மாநில தேர்தல் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அ. இ. புத்தகக் காட்சியில்!

புதுடில்லி, நவ. 13—டில்லியில், சாகித்திய அகாடமியின் ஆதரவில் அகில இந்திய புத்தகக் காட்சி நடைபெறுகிறது. 1578-ல் அச்சிடப்பட்ட தமிழ் புத்தகத்தின் முகப்புப் பக்கம் அக்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

திருக்குறளின் பல ஆங்கில மொழிபெயர்ப்புகளும் காட்சியில் இடம் பெற்றுள்ளன. திருக்குறளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

***

சிறப்புக் கூட்டம்

18—11—56 ஞாயிறு காலை 9-30 மணிக்கு

சென்னை கோகலே மண்டபம்

★

தலைவர்:

தமிழவேள் **பி. டி. இராசன்** M.L.A.

அவர்கள்

சிறப்புச் சொற்பொழிவாளர்:

அண்ணா

அவர்கள்

★

பொருள்: 'தோழமை'

நன்கொடை: ரூபாய் ஒன்று

குறிப்பு:—நண்பர்கள் கழக சார்பில் 11—11—56-ல் நடைபெற விருந்த இக்கூட்டம் 18—11—56-ல் நடைபெறுகிறது. அன்று தேர்தல் நிதி அளிக்கப்படும்.

—நண்பர்கள் கழகம்

***

'ஹங்கேரியில் அன்னியர் தலையீடு'

'மூவர் குழு விசாரணை நடத்தும்'

ஐ. நா. பொதுச்செயலாளர் அறிவிப்பு

நியூயார்க், நவ. 16—ஹங்கேரியில் அன்னியர் தலையீட்டால் தோன்றியுள்ள நிலைகளை ஆராய்வதற்காக மூன்று பேர் கொண்ட குழு ஒன்று செல்லும் என்றும், அந்தக் குழுவினர் தாங்கள் கண்டறிந்த நிலைகளை ஐ நா. பொதுச் சபைக்குத் தெரிவிப்பர் என்றும் பொதுச்செயலாளர் ஹாமர்ஸ்க் ஜோல்டு தெரிவித்திருக்கிறார்.

ஆஸ்கார் கண்டர்சன் (நார்வே), ஆர்தர் லால் (இந்தியா), ஆல்பெர்டோ லெராஸ் (கொலம்பியா) ஆகிய மூவரும் இந்தக் குழுவில் இடம் பெறுவர் என்று தெரியவருகிறது.

இந்தக் குழுவினர் 'நிபுணர்கள்' என்ற பெயரோடு விசாரணை நடத்துவராம்.

'ஹங்கேரிக்கு ஐ நா. பார்வையாளர் அனுப்பப்படுவர் என்ற திட்டம், இந்தக் குழு அனுப்பப்படுவதனால் கைவிடப்பட்டதாக ஆகாது' என்றும் ஐ நா. பொதுச் செயலாளர் கூறியிருக்கிறார்.

'மூன்றாவது நபர் தலையிட காரணம் கிடையாது'

ஹங்கேரி பற்றி புல்கானின்

ஹங்கேரி-ரஷ்ய உறவு நிலையில் மூன்றாவது நபர் தலையிடுவதற்குக் காரணம் கிடையாதென்று பிரிட்டிஷ் - பிரெஞ்சுப் பிரதமர்களுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் ரஷ்யப் பிரதமர் புல்கானின் குறிப்பிட்டுள்ளாராம்.

ஹங்கேரியில், மக்களின் ஜனநாயக அரசைப் பாதுகாத்துவிட்டதாகவும் ஹங்கேரி அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்கி அதற்கு உதவி செய்வதை கடமையென்று ரஷ்யா கருதுவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

அதிகாரிகளுக்கு மிரட்டல்?

ஹங்கேரி இராணுவ அதிகாரிகள் காதார் அரசாங்கத்துக்கும், சோவியத் அரசாங்கத் தலையீட்டுக்கும் ஆதரவு தெரிவிக்கும் பத்திரத்தில் கையெழுத்திட வேண்டுமென்றும், இல்லையேல் அவர்கள் 'டிஸ்மிஸ்' செய்யப்படுவர் என்றும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாம்.

ஹங்கேரிய...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கையான வாய்ப்பளிக்கும் அமைப்பு முறையைப் பொறுத்துள்ளது. விவகாரமாகும்; எனவே, அந்த வேலைத்தான் கல்வி எதிர்பார்க்க வேண்டும் என நாங்கள் ஆரம்ப முதலே கூறிவந்திருக்கிறோம்

"இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் மூலகாரணம், அதிகார வெறிகொண்ட சர்க்காரின் போக்குதான். சர்க்கார், தொழிலாள மக்களின் கஷ்டங்களை அலட்சியப்படுத்தினர். சில மேற்கத்திய, கிழக்கத்திய நாடுகளின் கம்யூனிஸ்டுத் தலைவர்கள், ஆட்சிமுறையை ஜனநாயகப்படுத்துவதை எதிர்க்கின்றனர்; ஸ்டாலினிசம் வேண்டும் என்று கோருகின்றனர் என்பதும், குழப்பங்களுக்குக் காரணம்.

'ஹங்கேரியில் ஆர்ப்பாட்டங்கள் துவங்கியபோது, கெரோ, யூகோஸ்லாவியாவிலிருந்து திரும்பியதும் கூட்டம் ஒன்றில் பேசுகையில், எல்லா மக்களையும் அவமதிக்கும் வகையில் பேசினர்."

காமன்வெல்திலிருந்து பாகிஸ்தான் வெளியேற வேண்டும்

முஸ்லிம் லீக் கோருகிறது

கராச்சி, நவ. 16—'காமன்வெல்திலிருந்து பாகிஸ்தான் வெளியேறவேண்டும்; பாக் மக்களின் விருப்பத்திற்கொப்ப வெளிநாட்டுக் கொள்கை வரையறுக்கப்படவேண்டும்; பாக்தாத் ஒப்பந்தத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுமாறு செய்ய வேண்டும்," என்பதாக பாகிஸ்தான் முஸ்லீம் லீக் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இரண்டு நாள் நடைபெற்ற லீகின் செயற்குழுக் கூட்டத்தில், 'இந்தியா திணித்த அரசியல் சட்டம் காஷ்மீர் மக்களை அடிமை கொள்வதாக உள்ளது; அதனை பாக். சர்க்கார் கவனித்து, ஆக்கிரமிப்பிற்கு ஆளாகியுள்ள காஷ்மீர் மக்களை விடுவிக்கவேண்டும்,' என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாம்.

மீண்டும் தோல்வியா?

நியூயார்க், நவ 15—'சியாங் பிரதிநிதிகளுக்குப் பதிலாக ஐ. நா. சபையில் சீனப் பிரதிநிதியை அமர்த்தவேண்டும்' என்று, ஐ நா. பொதுச் சபை நிரந்தரக் குழுவில் இந்தியா கொண்டுவந்த தீர்மானம் மீண்டும் தோல்வியுற்றிருக்கிறது.

9 அரபு நாடுகள் போரில் இறங்கும்?

பெய்ருத், நவ. 15—"பிரிட்டிஷ், பிரெஞ்சு, இஸ்ரேலியப் படைகள் நிபந்தனையின்றி உடனடியாக எகிப்தை விட்டு வெளியேறாவிடில், அவற்றிற்கு எதிராக 9 அரபு நாடுகளும் இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டியதிருக்கும்"

என்று, ஒன்பது அரபு நாடுகளின் அதிபர்கள் மூன்று நாளைய ஆலோசனைக்குப் பின் வெளியிட்டுள்ள அறிக்கையில் எச்சரித்துள்ளனர்.

நாசர் — ஐ. நா. செயலாளர் பேச்சுவார்த்தை

ஐ நா. பிரதம செயலாளர் நாசரை சந்தித்து $1\frac{1}{2}$ மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினாராம்; மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமாம்.

காஞ்சீபுரம் நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

"18-11-56 காலை 10 மணிக்கு, காஞ்சீபுரம் நகர தி. மு. கழகச் செயற்குழுக்கூட்டம், 'திராவிட நாடு' நிலையத்தில் நடைபெறும். தேர்தல் நிதி திரட்டுதல், கழக வரவு—செலவு ஆகிய பிரச்சினைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்"

என்று காஞ்சிபுரம் நகர தி மு கழகச் செயலாளர் தோழர் ஆர் வெங்கடேசன் அறிவிக்கிறார்.

***

கு. தா. பணிக்கம்பட்டிக்கு

அண்ணா வருகை

20-11-56-ல், திருச்சி மாவட்டம் கு. தா. பணிக்கம்பட்டியில் தோழர் நல்லுசாமி தலைமையில் கிளைக் கழகக் கட்டிடத் திறப்புவிழா நடைபெறும்.

அண்ணா அவர்கள் கட்டிடத்தைத் திறந்து வைப்பார்.

தோழர் எம். எஸ். மணி கழகக் கொடியேற்றுவார்.

தோழர் அன்பில் தருமலிங்கம் கே. வி. கே. சாமி படத்தைத் திறந்து வைப்பார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவார்.

சென்னை பி. & சி. ஆலை

தி. மு. கழகத் தேர்தல் நிதிக் குழு உறுப்பினர்களுக்கு:

"18-11-56 பகல் 2 மணிக்கு, சென்னை—குயப்பேட்டை திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையில், சென்னை பி. அண்ட் சி. ஆலை, தி மு. கழகத் தேர்தல் நிதிக்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். உறுப்பினர்கள் வசூலித்த நிதியையும், நன்கொடை புத்தகங்களையும் உடன் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, பி. அண்ட் சி. ஆலை தி மு கழகத் தேர்தல் நிதிக்குழுச் செயலாளர் கே. சுப்பிரமணி அறிவிக்கிறார்.

தென்பகுதி இரயில்வே எம்பிளாயீஸ் யூனியன்

மாயவரம் கிளை துவக்க விழா

18-11-56 மாலை 3 மணிக்கு, மாயவரம் இரயிலடிக்கருகிலுள்ள நாடார் சத்திரத்தில் மாயவரம் கிளை தென்பகுதி இரயில்வே எம்பிளாயீஸ் யூனியன் நிர்வாகிகள் தேர்தல் கமிட்டிகள் அமைத்தல் வரவு—செலவு கணக்குப் பரிசீலனைக் கூட்டம் நடைபெறும்.

அன்று மாலை 5 மணிக்கு, மாயவரம் இரயிலடிக்கருகில் மேற்படி கிளை துவக்க விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. வி ஆனந்தன், கே. இராமச்சந்திரன், எஸ். இராகவானந்தம், ஜி பராங்குசம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

லோயர்சேக்கல்முடி தி. மு. கழக உறுப்பினர்கட்கு:

18-11-56 மாலை 5 மணிக்கு, லோயர்சேக்கல்முடி பிள்ளை வீதியில், கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அனைவரும் கலந்துகொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சென்னை 16-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

18-11-56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சென்னை 16-வது வட்ட தி மு கழகப் பணிமனையில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை 35-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

18-11-56 மாலை 5 மணிக்கு, சென்னை—கோடம்பாக்கம் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்படும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

18-11-56 காலை 9 மணிக்கு, சென்னை — குயப்பேட்டை, (24-வது வட்டம்) ராமானுசத் தோட்டத் தெருவிலுள்ள திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையில் தோழர் கணேசன் தலைமையில் 'காமன்வெல்த்தில் இந்தியாவின் உறவு' என்பது குறித்துப் பல தோழர்கள் பேசுவர்.

* * *

18-11-56 மாலை 6 மணிக்கு, சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றப் பணிமனையில் தோழர் சோ. சுந்தரம் தலைமையில் 'மூவர் முழக்கம்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

திருக்குறள் விளக்கம்

18-11-56 காலை 10 மணிக்கு, சென்னை—வண்ணை தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், தமிழ் இளைஞர் கழகச் சார்பில் திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்கள் திருக்குறளில் 'ஒழுக்கமுடைமை' எனும் அதிகாரத்தை விளக்கி சொற்பொழிவாற்றுவார்.

'பேசும் பிணம்'—நாடகம்

19—11—56 மாலை 6 மணிக்கு சென்னை—இராயபுரம் தமிழ் வளர்ச்சி மன்றத்தில் (எண் 64, சூரியநாராயணசெட்டி தெரு) தோழர் என். வி. மதிவண்ணன் தலைமையில், 'பேசும் பிணம்' நாடகத் துவக்க விழா நடைபெறும். தோழர்கள் வே. கபிலன், ப. புகழேந்தி, எஸ். டி. இளந்திருமாறன், அன்புதாசன், தே. இராசா பாதர் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.